அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்: 21 /2017
தேதி: 21.2.2017

## விவசாயத்தை அழிக்கும் திட்டங்களை உடனடியாக கைவிடவேண்டும்.

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை.

ஒரு நாட்டில் விவசாயம் இல்லாமல் எந்த ஒரு முன்னேற்றமும் இருக்காது. அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த விவசாயத்தை அழிக்கும் திட்டம் எதுவாக இருந்தாலும் அதனை செயல்படுத்தக்கூடாது.

பருவ மழை பொழியாதது, வானிலை மாற்றங்கள், வறட்சி நிலை, நிலத்தடி நீர் இல்லாமை என்று இயற்கை ஒரு பக்கம் விவசாயத்தை பாதித்தாலும், மத்திய அரசு சில திட்டங்கள் வாயிலாகவும் விவசாயத்தை பாதிப்படையச் செய்திருக்கிறது. தற்போது புதுக்கோட்டை மாவட்டம் நெடுவாசலில் ஹைட்ரோகார்பன் என்னும் இயற்கை எரிவாயு எடுக்கும் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த திட்டத்தால் நிலத்தடி நீர் இல்லாமல், விவசாயம் முற்றிலும் அழிந்து விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது. இந்த திட்டத்தை எதிர்த்து விவசாயிகள், கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள் என பல்வேறு தரப்பினர்களும் போராடிவருகின்றனர்.

எனவே, விவசாயத்தை பாதுகாக்கும் வகையில் புதுக்கோட்டை மாவட்டம் நெடுவாசல் மற்றும் நாடுமுழுவதும் 31 இடங்களில் ஹைட்ரோகார்பன் என்னும் இயற்கை எரிவாயு எடுக்கும் திட்டத்தை மத்திய அரசு உடனடியாக கைவிடவேண்டும் என்று என் சார்பிலும், அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும்அன்புடன்,

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்